OS No.75/2017, நாள்: 25.11.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனியப்பன் | வயது | : 55 |
| தந்தை பெயர் | : துரைசாமி | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : குடிமேனஹள்ளி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

பி.வா.சா.1 ___ முனியப்பன் ஆஜர், முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி. மேற்படி நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எனக்காகவும் 2ம் பிரதிவாதிக்காகவும் தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 30.04.1984ம் தேதியிட்ட பட்டா எண்.1458க்கான கூட்டு பட்டா ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 9) பி.வா.சா.ஆ.2 ஆகும். எனது பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.316-க்கான மின் கட்டண அட்டை பி.வா.சா.ஆ.3 ஆகும். வழக்கு சொத்துக்களுக்கான புகைப்படங்கள் (எண்ணிக்கை 11) குறுந்தகட்டுன் பி.வா.சா.ஆ.4 ஆகும். (புகைப்படங்கள் பிரதிவாதிகளுக்கு சாதகமாக ஜோடித்து எடுக்கப்பட்டதாக வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது) தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.